## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவராண்மை

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்களுக்கும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் ரூபா 38,727,358 பெறுமதியான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்கள் ஒரு விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முகவராண்மையின் அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஒதுக்கங்களின் கொள்கைகள் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருக்கின் மீளச் செலுத்தப்பட்டிராத பிணை வைப்புகளான ரூபா 22,582 தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை 6.5 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்கீட்டு மென்பொருள் பொருத்துவதற்காக முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 272,160 தொகை முற்பணமாகக் கணக்கிடப்பட்டிருக்கையில் திரண்ட செலவினமாகவும் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.2.4 இணங்காமைகள்

06 இறுதி இருப்பு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கும் களஞ்சியத்தில் உள்ள பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே ரூபா 118,664 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.5 பெறவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நீண்ட காலமாக அறவிடப்படாதிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 3,481,869 தொகையானதுடன் இதில் ரூபா 2,074,142 பெறுமதியான 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்படாது நிலவிய மீதிகளும் காணப்பட்டதுடன் அப் பெறுமதி கடன்பட்டோரின் 60% ஆகக் காணப்பட்டது.

### 1.2.6 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம், நீண்டகாலமாகச் செலுத்தப்பட வேண்டியதாக இருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 11,725,333 ஆனதுடன் இப் பெறுமதியில் ரூபா 2,051,566 தொகை 4 ஆண்டுகளுக்கு மேலான காலமாக செலுத்தப்பட வேண்டிய மீதிகளாகக் காணப்பட்டதுடன் இத் தொகை மொத்தக் கடன் கொடுத்தோரில் 17% ஆகக் காணப்பட்டது.

(ஆ) 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக கோரப்பட்டிராத ரூபா 87,212 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் வருமானத்திற்கு எடுக்கப்படாது தொடர்ந்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அக் கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(அ) ரூபா 48,026,184 கிரயமான மோட்டார் வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பராமரிப்புச் செலவினம், 10 வாகனங்களுக்கு உரித்தான கைதவிர்ப்புகள் மற்றும் 04 வாகன விபத்துக்கள் தொடர்பான கோவைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த 14 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தொடர்பான ஆட்சேர்ப்பு கோவைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கற்பிட்டிக் காரியாலயத்தில் கம்பி வேலி ஒன்றை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,323,844 தொகையான செலவினத்திற்கான கோவை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைகள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(6) ஆம் பிரிவு | உரிய அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் எழுத்து மூல முன்அங்கீகாரம் பெறப்படாது ரூபா 5,017,574 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | முறையான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் மீளாய்வு**

**2.1.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முகவராண்மையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 39,167,043 பற்றாக்குறையானதுடன், அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 30,039,707 ஆக இருந்தமை நிதிசார் விளைவுகளில் ரூபா 9 மில்லியன் தொகையான பற்றாக்குறையில் அதிகரிப்பைக் காட்டியது. வருமானம் குறைவடைந்தமையும் ஆராய்ச்சிச் செலவினம் மற்றும் பழுதுபார்த்தற் செலவினம் அதிகரித்தமையும் இதற்குக் முக்கிய காரணங்களாகக் காணப்பட்டன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 29 ஆராய்ச்சிகளே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 4 ஆராய்ச்சிகள் மாத்திரமே 100% முன்னேற்றத்தை அடைந்திருந்தன.

(ஆ) சில ஆராய்ச்சிகளில் பௌதீக முன்னேற்றத்தை அடைவதற்கு முன்னர் அவ் ஆராய்ச்சிக்கான நிதி ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்ட இலக்கை விஞ்சியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 29 ஆராய்ச்சிகளின் நிதி முன்னேற்றம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| நிதி முன்னேற்றத்தின் சதவீதம் | ஆராய்ச்சி எண்ணிக்கை |
|---|---|
| % | |
| 100 மேலாக செலவிடப்பட்ட (எதிர்பார்க்கப்பட்ட இலக்கிற்கு மேற்பட்ட) | 7 |
| 100 – 80 | 3 |
| 79 – 60 | 10 |
| 59 - 40 | 6 |
| 40 இற்குக் குறைவானவை | 3 |
| மொத்தம் | 29 |

மதிப்பீடு தயாரிக்கப்படுவதிலும் செலவின முகாமைத்துவத்திலும் நலிவான நிலைகள் நிலவியமை இங்கு அவதானிக்கப்பட்டது.

## 2.2.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகவராண்மையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த புத்தகக் கடன், துவிச்சக்கர வண்டிக் கடன் மற்றும் இடர்கடன் தொகைகளான ரூபா 5,584 தொகை உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) 7 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடர்கடன் மீதியான ரூபா 204,875 தொகை உரிய உத்தியோத்தர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளி நிறுவகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக முகவராண்மையால் மீளாய்வாண்டின் போதும் ரூபா 1,285,604 தொகை சம்பளமாகவும் ரூபா 325,924 தொகை படிப்பணமாவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பல வருட காலமாக சந்தை விலைகள் கோரப்படாது பாதுகாப்புச் சேவைகளை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அச் சேவையை வழங்குவதற்காக ரூபா 4,418,684 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சந்தை விலைகளுக்கு மேலாக சேவை பெறப்பட்டிருந்ததுடன் முகவராண்மையில் இருந்து தேவைகள் தொடர்பாக விசாரித்தறியாது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(உ) மீளாய்வாண்டின் போது விபத்திற்குட்பட்டிருந்த இரு வாகனங்களுக்கு உரித்தான நட்டங்களுக்காக காப்புறுதி இழப்பீட்டை பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறித்த தினத்திற்கு முன்னர் நீர் பட்டியல் கட்டணம் செலுத்தப்படாத காரணத்தினால் ரூபா 57,198 தொகையான கழிவுப் பெறுமதி வழங்கப்பட முடியாதிருந்தது.

(ஆ) முகவராண்மையின் வருமான வரி விலக்கு பெறப்பட்டிருந்த போதிலும் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த சேவைகளில் பிடித்து வைத்தல் வரியாக ரூா 969,607 தொகை ஊழியர் வருமானத்தில் இருந்து கழிக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகள்

முகவராண்மையின் தாபிப்பில் நோக்கங்களிற்கு முரணாக பின்வரும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) ஓர் பொழுதுபோக்கு வைபவத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 589,688 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணியினரின் ஊழியர்கள் முகவராண்மை சேவைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் முகாம்களை நடாத்துவதற்காக நிர்வாக அதிகாரிகளினால் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவாக அவ் ஊழியர்களுக்காக ரூபா 559,035 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 விளைவற்ற சொத்துக்கள்

05 வருட காலத்திற்கு மேலாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிராத 04 வங்கிக் கணக்குகளின் ரூபா 12,959 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

### 2.2.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடம்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 40 | 25 | 15 |
| நிறைவேற்று தரம் அல்லாத | 354 | 282 | 72 |
| மொத்தம் | 394 | 307 | 87 |

### 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது முகவராண்மையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை தொடர்பில் மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வாகனப் பராமரிப்பு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) நிர்மாண ஒப்பந்தங்கள்
(ஈ) பெறவேண்டிய மீதி
(உ) செலுத்த வேண்டிய மீதி